


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும்

முல்லைத்தீவு முள்ளியவளை 2ஆம் வட்டாரத்தை

வாழ்விடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி.சுப்பிரமணியம் தங்கம்மா

***அவர்களின் சிவபதப்பேறு குறித்த***

## 31ம் நாள் நினைவேந்தல்

**01-10-2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னையின் மடியில்
1930.08.03

அமரர்

ஆண்டவன் அடியில்
2013.09.01

# திருமதி.சுப்பிரமணியம் தங்கம்மா

## திதி வெண்பா

விஜய வருடம் ஆவணி ஞாயிறு நன்னாள்
அபரபக்க ஏகாததி மான்புடையாள் –நல்
தங்கம்மா முல்லைமண் புகழ்
விநாயகர் பாதம் சேர்ந்தநாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என்றென்றும் எமக்காக வாழ்ந்து எம்
வாழ்வின் உயர்வுக்காய் முயன்றுழைத்து
கட்டியவனைக் கண்கலங்காது வாழ்வு
காட்டி பிள்ளைகளின் வாழ்வே தன்
வாழ்வென வாழ்ந்து அன்பையும் பண்பையும்
பாசத்தையும் வாரியிறைத்து எல்லோரும்
மதிக்கும் வண்ணம் வாழ்ந்து எங்கள்
நெஞ்சகத்தில் கனதியான நினைவுகளைச்
சுமக்கச் செய்த எங்கள் அன்புத் தெய்வமே
உங்களுக்கு "தங்க அம்மா" மலரினை
இதயக் காணிக்கையாக்கி வணங்கித்
துதித்து ஆராதித்து சமர்ப்பிக்கின்றோம்.

*இங்ஙனம்*

*குடும்பத்தினர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தேவாரம்

எந்தாய ரெத்தந்தை யெச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் எவர் நல்லார்.
செத்தால் வந்துதவுவாரொருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்ததாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்ல என்றென்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்ல கண்டங் கொண்டடியேன் என் செய்கேன்.

# திருவாசகம்

கரணங்க ளெல்லாம் கடந்து நின்ற கதைமிடற்றன்
சரணங்களே சென்று சார்தலுமே தானெனக்கு
மரணம் பிறப்பென்றிவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்னுாதாய் கோத்தும்பீ

# திருவிசைப்பா

ஆறாத பேரன்பின்
அவருள்ளம் குடி கொண்டு
வேறாகப் பலர் சூழ
வீற்றிருத்தி அது கொண்டு
வீறாடி இவன் உன்னைப்
பொது நீப்பான் விரைந்தின்னம்
தேறான் தென் பொழிற் கோடைத்
திரை லோக்கிய சுந்தரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திருப்பல்லாண்டு

நிட்டையி லாவுடல் நீத்தென்னைக்
ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடியாரைச்
சீராட்டும் திறங்களுமே சிந்தித்து
அட்ட மூர்த்திக்கென் அகம் நெக
ஊறும் அமிர்தினுக்கு ஆலநீழற்
பட்டனுக்கு என்னைத்தன் பாற்படுத்த
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



# திருப்புராணம்

பல்முறை உயிர்கள் எல்லாம் பாவித்து ஞாலம் காப்பார்
தன் நெடுங் குடைக்கீழ்த் தத்தம் நெறிகளில் சரித்து வாழும்
மன்னரை இன்றி வைகும் மண்ணுலகு எண்ணும் காலை
இன் உயிர் இன்றி வாழும் யாக்கையை ஏக்கம் என்பார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பிறவியிலே யாற்றினிற் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே
உறுதி குரு வாக்கியப் பொருளாலே
உனது பதகாழியைத் தருவாயே
அறு சமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறி வார்க்குணக் கடலோனே
குறு முனிவனேத்து முத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமானே!

## வாழ்த்து

வையநீடுக மாமழை மன்னுக
மெய்விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே

ஓம் நமப் பார்வதி பதையே
ஹர ஹர மகா தேவா
தென்னாடுடைய சிவனே போற்றி
எற் நாட்டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞான தீபம்



முன்னையோர் நமது நாட்டின்
முனிவரவர் தேடி வைத்த
முழுமுதல் ஞானமெல்லாம்
மூட நம்பிக்கை என்றும்
பொன்னையே தெய்வம் என்றும்
போகமே வாழ்க்கை என்றும்
மனிதரைக் கொன்று வீழ்த்தும்
போரையே வீர மென்றும்
தன்னையே பெரிதாய் எண்ணி
தனக்குமேல் இருக்கும் வேறோர்
சக்தியின் நினைப்பே இன்றி
தருக்கியே பிறப்பின் மாண்பைத்
தின்னுமோர் மயக்கம் நீங்கித்
தெளிந்திட எழுந்த ஞான!
தீபமே இராம கிருஸ்ண
தேவனே போற்றி! போற்றி!



ஆதியாம் பரம அனைத்திலும் உறைவோய்
அசைவிலாய் குணங்களைக் கடந்தோய்
ஓதினார் உளத்தில் ஒளி தரும் சுடரே
உயர்வற உயர்நலம் உடையாய்
காதலால் மோகம் களைந்திடும் கருணைக்
கழலினை பகலிராக் கருதேன்.
ஆதலால் உரையே சரணென அடைந்தேன்
அலந்தவர்க் கருள் பொலன் கழலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும்
சாவகச்சேரியை வசிப்பிடமாகவும்
முல்லைத்தீவு முள்ளியவளை 2ஆம்
வட்டாரத்தை வாழ்விடமாகவும் கொண்ட
அமரர்

**திருமதி.சுப்பிரமணியம் தங்கம்மா**

அவர்களின் வாழ்வுப் பயணிப்பு..

**(1930 - 2013)**

தமிழும் சைவமும் தரணிபுகழ் பரப்பும் வடக்கு மாநிலத்தில் பொன்கொடு தீவாக வனப்புமிகு அழகிய கிராமமாக விளங்குவது புங்குடுதீவு. அத்தகு வனப்பும் வளமும் கொண்ட புங்குடுதீவு கிராமத்தில் இல்லற இணைவாக வாழ்ந்த நாகமுத்து (கிராமசேவையாளர்) கற்பகம் தம்பதியினரின் முத்தான மூன்றாவது மகளாக 03.08.1930 ஆம் ஆண்டு புண்ணியபூமியான புங்குடுதீவு வந்துதித்தார்.

நாகமுத்து கற்பகம் தம்பதியினரின் இல்லறப்பேற்றின் நற்பயனாக அமரர் திருமதி. சுப்பிரமணியம் தங்கம்மாவின் உடன் பிறப்புக்களாக சிவக்கொழுந்து, இரத்தினம் (மாங்குளம், கிராமசபைத் தலைவர்) சண்முகம் ஆகியோர் வந்துதித்தனர். உடன் பிறவாச் சகோதரமாக கணேசன் அவர்களும் இப்புவியில் வந்துதித்தார். அமரர் திருமதி.சுப்பிரமணியம் தங்கம்மா அவர்களின் பிறந்தகம் புங்குடுதீவாக இருப்பினும் காலச் சூழ்நிலை காரணத்தால் வாழ்விடம் சாவகச்சேரியாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது இளமைப் பராயத்திலேயே தந்தையை இழந்ததனால் சகோதர சகோதரிகளின் அன்பும் அரவணைப்பும் காரணமாக நல்லதொரு குடும்பப் பெண்ணாக வளர்ந்து வந்தார். தென்மராட்சி விருந்தோம்பல் மற்றும் தமிழர் தம் பண்பாட்டின் முதுசமாக விளங்கும் பிரதேசம்.

அக்காலத்தில் தமிழ்ப்பெண் ஐந்தாம் வகுப்பு வரையில் கல்வி கற்றால் அது பெரும் புகழுக்குரிய செயல். சாவகச்சேரி சங்கத்தானை இந்துக்கல்லூரியில் அமரர் திருமதி. சுப்பிரமணியம் தங்கம்மா அவர்கள் ஐந்தாம் தரம் வரையில் கல்வி கற்றார்.

அமரர் தங்கம்மா அவர்கள் மங்கைப் பருவத்தை அடைந்த போது ஒரு குடும்பத்தை ஓர் இல்லறத்தை தாங்கி இயங்கும் ஆற்றல் பெற்றதனை அறிந்து பெரியோர் இல்லறப் பந்தத்தில் இணைக்க முனைந்து நின்ற போது மாவீரன் பண்டார வன்னியன் வாழ்ந்த பூமியாம் முல்லைத்தீவு, முள்ளியவளை இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த வேளான் விசுவலிங்கம் தெய்வானை (கண்வைத்தியர்) தம்பதிகளின் மூத்த ஆண்மகவும் இரண்டாவது பிள்ளையுமான அழகான முருகன் நாமம் கொண்ட சுப்பிரமணியம் அவர்களை கரம் பிடித்தார். வாழ்வின் நல்லறமான இல்லற வாழ்வில் சுப்பிரமணியமும் தங்கம்மாவும் இணைந்தனர். திரு.சுப்பிரமணியம் பாரம்பரியமாக வாழ்ந்த முள்ளியவளை இரண்டாம் வட்டாரத்தில் சிறந்த நல் விவசாயியாக தன் உடன் பிறப்புக்களான பொன்னம்மா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்பலம், இரத்தினசிங்கம், வள்ளிநாயகி, செந்தில்வேல் ஆகியோரின் அன்பும் ஆதரவும் அரவணைப்பும் கிடைக்க சுப்பிரமணியம் தங்கம்மா தம்பதியினரின் இல்லற வாழ்வும் வாழ்விடமும் முள்ளியவளையாற்று.

இல்லறம் நல்லறமாவது இல்லத்தலைவியின் ஆற்றலில் தான் தங்கியுள்ளது. அதாவது.

"அறனும் உடைத்டதாயின், இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்ற வள்ளுவரின் வாக்குக்கிணங்க சுப்பிரமணியம் தங்கம்மா தம்பதியினர் இனிதே இல்லறம் நடாத்தினர். இல்லறத்தின் பயனாவது;

"எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்"

அதற்கேற்றாற்போல் பாசமும் பண்பும் மிக்க சுப்பிரமணியம் தங்கம்மா தம்பதியினர் பயன்மிகு பதினொரு பிள்ளைச் செல்வங்களைப் பெற்றனர். முள்ளியவளை காட்டுவிநாயகர் மீதான பக்தியும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் மீது கொண்ட பயபக்தியும் இவர்கள் மிகச் சிறந்த பிள்ளைச் செல்வங்களைப் பெற்றேக வித்திட்டது.

மூத்த மகன் சிவராசா(வவுனியா), மூத்த மகளும் இரண்டாவது பிள்ளையுமான சிவராணி(சேமமடு, வவுனியா), சிவயோகேஸ்வரி(முள்ளியவளை), சிவபாலன் (டென்மார்க்) தில்லைநாதன்(டென்மார்க்), பத்மநாதன்(லண்டன்),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஸ்கரன்(அமரர்), பிரபாகரன்(லண்டன்),ஈஸ்வரன்(கட்டார்), தவனேஸ்வரி(லண்டண்), கிருஷ்ணகுமார்(கனடா), ஆகியவர்களான எண்திசை போற்றும் எட்டு ஆண்மக்களையும் மூன்று தேவிகளையும் பெற்று வளர்த்து கல்வி பல கற்பித்து நாடு போற்றும் ஊர் போற்றும் உற்றார் போற்றும் நற்பிள்ளைகளாக வளர்த்தெடுத்தனர் அமரர் திருமதி. தங்கம்மா அவர்கள்.

தன்பிள்ளைகளுக்கேற்ப வாழ்க்கைத்துணைகளையும் சிறப்பார்ந்த முறையிலே அமைத்துக் கொடுத்தார். ஒரு குடும்பத்தில் வந்த சேருகின்ற மூத்த மருமகன், மூத்த மருமகள் இருவரும் அக்குடும்பத்தை வழி நடத்துகின்ற ஆற்றல் மிக்கவர்களாக இருக்கின்ற போது தான் குடும்பக் குலவிளக்கு ஔிர ஆரம்பிக்கும் என்பர்.

அதற்கேற்றாற் போல் அமரர் தங்கமாவின் மூத்த மருமகளாக செல்வராணி மூத்த மருமகளாக செல்வவிநாயகம் ஆகியோர் இக்குடும்ப விருட்சத்தின் விழுதுகளாயினர். தொடர்ந்து தன் பிள்ளைகளுக்கேற்ப வாழ்க்கைத் துணைகளாக, கேசலநாதன், புஸ்பமலர், தேவசேனாம்பிகை, சுதாமதி, நாகராணி, கலைச்செல்வி, மதிவதனி, தர்மராஜா, பிரபானந்தி ஆகிய மருமக்கள்மார்களை தன் குடும்ப விருட்சத்தில் இணைத்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பிள்ளைகளோடு எத்தகு அன்பும் பாசமும் கொண்டாரோ அதனை விட மேலாக தன் மருமக்கள்மார்களிடத்தும் அளவற்ற அன்பும் பாசமும் கொண்டிருந்தார்.

தனது கணவனின் சகல நடவடிக்கைகளிலும் முன்னின்று உழைக்கும் ஒருவராகவே வாழ்நாள் முழுவதும் செயற்பட்டார். கடின உழைப்பும் நேர்மையான குணங்களினாலும் அஞ்சாத உறுதி கொண்ட நெஞ்சத்தாலும் கடவுள் பக்தியாலும் ஊரார் உறவுகளில் கனகமக்கா, தங்கமக்கா, தங்கம்மா, தங்கமாச்சி என்றவாறு சிறப்பு மிக்கவராக மிளிர்ந்தார்.

முல்லை மண்ணில் ஏற்பட்ட பல்வேறு இடப்பெயர்வுகள் துன்பங்கள், துயரங்கள் எல்லாம் அமரர் தங்கம்மாவின் வாழ்வின் ஆறாத வடுக்களை—வேதனைகளை—துயரங்களை-துன்பங்களை சுமக்க வைத்தன.

உண்மையில் எங்கள் அம்மா—எங்கள் மாமி—எங்கள் அப்பம்மா—எங்கள் அம்மம்மா—எங்கள் ஆச்சி நூறு வருசம் வாழ்ந்திருப்பார். துயர்மிகு முகாம் வாழ்க்கையும் இடப்பெயர்வும் இல்லையென்றால். இது எங்கள் முதுசங்களின் வாழ்வு சிறப்பாய் அமைந்திருக்கும்.

அமரர் சுப்பிரமணியம் தங்கம்மா அவர்கள் தன் வாழ்வுப் பயனிப்பில் பெயர் சொல்ல வந்த பேரப்பிள்ளைகளாக முப்பதுக்கு மேற்பட்டோரையும் பூட்டப்பிள்ளைகளாக இருபதுக்குமேற்பட்டோரையும் கண்டு குதூகளித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தவர். அமரர் தன்னொத்த வயதினர்களுடன் கதைக்கும் போது அடிக்கடி கூறும் வார்த்தை "தான் தீர்க்க சுமங்கலியாக சாக வேண்டும்" என்பதாகும்.

அந்த வார்த்தைக்கேற்ப வாழ்வில் தீர்க்கசுமங்கலியாக இவ்வுலகை விட்டு 01.09.2013 அன்று காட்டா விநாயகர் பாதமடைந்தார்.

அமரர் திருமதி.சுப்பிரமணியம் தங்கம்மா அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்த வாழ்க்கை அற்புதமானது. மற்றவர்களின் வாழ்வுக்கு வழிகாட்டியானது. எங்கள் குடும்பக் குல விளக்கு தனது வாழ்நாள் காலத்தில் எங்களின் ஒவ்வொரு அசைவிற்கும் மூச்சாக இருந்தார். பிறந்தது புங்குடுதீவு. வளர்ந்தது சாவகச்சேரி. வாழ்ந்தது முள்ளியவளை என மூன்றூருக்குச் சொந்தமாகி நின்றார் எங்கள் அம்மா.

எங்களின் சகலவற்றிலும் அம்மாவின் வார்த்தை கலந்திருக்கும். வார்த்தையால் கட்டுப்படுத்தும் மந்திரக்கோல் அம்மாவிடம் இருந்தது. அந்த மந்திரக்கோலின் பின்னால் அவரின் அன்பும் கண்டிப்பும் பாசமும் இறுகப்பற்றியிருந்தது. சகல பிள்ளைகளிடத்தும் இது துலாக்கோல் போன்றே இருந்தது. தனக்காகவன்றி நமக்காகவே வாழ்ந்து தனது இவ்வுலக வாழ்வுப் பயணிப்பை பூர்த்தியாக்கியவர். தான் அமரர் திருமதி சுப்பிரமணியம் தங்கம்மா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரத்துவம் அடைந்ததற்கு முதல்நாள் 31.08.2013 ஆந் திகதி மூத்தமகனையும் மூத்தமகளையும் (சிவராசா, சிவராணி) அழைத்து கைகளில் முத்தமிட்டு **"நான் பெற்ற செல்வம் நலமான செல்வம் ......."** என்ற பாடலைப் பாடி ஆசிர்வதித்தார். இதுவே அவரின் கடைசி வார்த்தைகள்.

காலம் எதையும் மற்றவர்களுக்காய் விட்டு வைக்க காத்திருப்பதில்லை.

**"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்**
**பெருமையுடைத்து இவ்வுலகு"**

என்ற வள்ளுவரின் வாக்கு நிதர்சனமானது. அதற்கேற்ப 01.09.2013அன்று எமது குடும்பக் கோயிலின் தெய்வ தரிசனம் இம்மண்ணை விட்டுத் தலை சாய்ந்தார்.

எங்கள் மூச்சுக்காற்று இருக்கும் வரையில் அம்மாவின்-மாமியின் நினைவுகளோடு தான் வாழ்வோம். அம்மாவின் ஆத்மா காட்டாவிநாயகர் பாதம் சேர்ந்துறைய வேண்டுகின்றோம்.

-குடும்பத்தினர்-
01.10.2013ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டென்மார்க்கில் இருந்து
## மருமகள் புஸ்பம் புலம்பல்....

மாமியென்றவுடன் மறுவார்தையின்றி
அன்பை அள்ளிச் சொரிந்த தாய்
எங்கள் காதலுக்கு பச்சைக் கொடி காட்டி
வாழ வழிகாட்டிய சீமாட்டி!

உன்னிடத்தில் நான் கற்றதுவோ ஏராளம்
தன்னலமறற தியாகமாய் - எப்பவும்
பிள்ளைகள் மீதும்
மருமக்கள் மீதும்
பேரப்பிள்ளைகள் மீதும்
பாசத்தை பொழிந்த ஒரு கருணையுள்ளத்தை
உன்னைப்போல வேறு ஓரிடத்திலும் காணவில்லை.
தாயைப் போல உனக்குப் பணிவிடை செய்ய
எனக்கும் ஒரு காலம் வந்ததையிட்டு இன்றும்
பெருமைப்படுகின்றேன்.

டென்மார்க்கில் ஆறு மாதங்கள்..
எங்கள் தனிமை போக்கி..
எங்கள் வாழ்வைச் செதுக்கி..
எங்கள் பிள்ளைகளின் ஏக்கம் போக்கிய நாட்களை..
இன்று நினைத்தாலும் சந்தோசமாக இருக்கிறது.
இன்றும் சொல்லுவார் என் கணவர்
மகன் காதல் கண்டவுடன்..
எதிர்தவர்கள் மத்தியில் ஏற்றுக் கொண்டவர் மாமி
அவனுக்கொரு பொம்பிளை தேவைதானே..
செய்யட்டும்.

காலத்தின் தொடரோட்டத்தில் எல்லாருக்கும்
இறக்கங்கள் உண்டு
இது உன் இறக்கம் மாமி
காலத்தால் அழியாத உன் நினைவுகளுடன்

டென்மார்க்கிலிருந்து மருமகள் புஸ்பமலர்
பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டென்மார்க்கில் இருந்து..

நாலாவது மகன் (ராசனின்) நினைவுப் பகிர்வு !

மனிதருள் மாணிக்கமாய் - என்
மனதினுள் வாழ்ந்தவளே அம்மா !
உனதருள் வேண்டுமெனக்கென்றும்.

பொய்யாப் பிறப்பின்றி மெய்யாய் வாழ்ந்து ஜெயித்தவளே!
பதினொரு பிள்ளைகளுள் நான்காவதாக உன்
வயிற்றில் அவதரித்தது நான் செய்த பாக்கியம்.

ராசன், ராசனென்று நல்லன்பு காட்டினாய் என்மீது.
அழைத்தவுடன் அப்பாவையும் அழைத்துக்கொண்டு
ஓடி வந்தாய் டென்மார்க்கிற்கு 1995ம் ஆண்டு.
ஆறு மாதங்கள் எங்களுடனிருந்து..
பேரப்பிள்ளைகளுடன் கொஞ்சி விளையாடி பாசத்தை ஊட்டினாய்.

ஆலயங்கள் பார்க்க வென்று 1999ல் எங்களுடன்
இந்தியா வந்தாய்.
அங்கும் உன் பிள்ளைகளுக்காய் தரிசித்தாய்.
கடந்தாண்டும் நான் வந்திருந்த போது என்னுடன் அன்பாக..
பாசத்தோடு பேசி மகிழ்ந்தாய்.
இறுதியாக உன்னை பார்க்கவென்று ஓடிவந்த போது
எனக்காக காத்திருந்து
என் குரல் கேட்டவுடன் கண்ணீரில் பதில் தந்தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரில் எங்களையெல்லாம் மிதக்கவிட்டு நீ பறந்தாய்!
நீ மிதித்த புல்லும் சாகாது அம்மா !
விதி வரைந்த கோட்டின் வழியே நீ..
நீ வளர்த்த வளர்ப்பினிலே.. தான் நாம்.

உலகத்தின் மூலை முடுக்கெங்கும் உன் பிள்ளைகள்!
பேரப்பிள்ளைகள்.. பூட்டப்பிள்ளைகள்.
உன் எண்ணம் போல் அவர்களும் உயர்நிலையில்.
அனைவரிலிலும் அன்பு காட்ட
உன் ஒருவரால் எப்படி முடிந்தது என்று
நான் அடிக்கடி யோசிப்பேன்.

நீ ஒரு தெய்வப்பிறவியம்மா !
என்றும் நீ எங்கள் மனங்களில்
வாழ்ந்து கொண்டு இருப்பாய் .

**டென்மார்க்கில் அழியாநினைவுகளுடன்**
**அன்புமகன் (ராசன்) சிவபாலன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகளின் பேசும் கண்ணீர்..

எங்களின் கல்வி, வாழ்வு, பண்பு ஆகிய
எல்லாவற்றிலும் நீங்கள் தானே
நிழலாய் நிற்கின்றீர்கள்.
எங்களை நல்ல பேரப்பிள்ளைகளாக
வளர்த்தெடுப்பதற்கு நீங்கள் பட்டபாடுகளை
எங்கள் அம்மா, அப்பா சொல்லக்
கேட்டிருக்கின்றோம்.

உங்களின் அன்பான வார்த்தைகளும்
அழகிய முகமும்
எங்களின்
நினைவுகளில் என்றும் இருக்கும்.

நீங்கள் சொன்ன அறிவுரைகள்
நீதிக்கதைகள் உலக நடைமுறைகள் தான்
எங்களை வழிப்படுத்தி நிக்கின்றன
தங்க அம்மாவாக நீங்கள் எங்களின்
வாழ்வோடு எப்போதும் கலந்திருப்பீர்கள்
காலம் நீண்டு போனாலும் எங்களின்
நினைவுகள் நீங்கிக் போகாது
அம்மம்மாவே, அப்பம்மாவே....

சி. நவகீதன், சி. நவரூபன், செ.கவிதன், சு.
பா. அஜேசன்
கிருபாஷினி, த. வனஜா
கே. கோகிலினி

# திருமந்திரம்

## யாக்கை நிலையாமை

மண்ணொன்று கண்டீர் இருவகைப் பாத்திரந்
திண்ணென் றிருந்தது தீவினை சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணானாற் போல்
எண்ணின்றி மாந்தர் இறக்கின்ற வாறே.

பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்ட அப்பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழி நடவாதே.

ஊரெல்லாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே.

காலும் இரண்டும் முகட்டலக் கொன்றுள
பாலுள் பருங்கழி முப்பத்திரண்டுள
மேலுள கூரை பிரியும் பிரிந்தால்முன்
போலுயிர் மீளப் புக அறியாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீக்கை விளைந்தது செய்வினை மூட்டிற்ற
ஆக்கை பிரிந்த தலகு பழுத்தது
மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டுபோய்க்
காக்கைக்குப் பலி காட்டியவாறே.

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி காரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே.

மன்றத்தே நம்பி மாடம் எடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகை பெற்றேறினான்
மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்
சென்றத்தா வென்னத் திரிந்திலன் தானே.

வாசந்தி பேசி மணம்புணர்ந்தப் பதி
நேசந் தெவிட்டி நினைப்பொழிவார் பின்னை
ஆசந்தி மேல்வைத்தமைய அழுதிட்டுப்
பாசந்தீச் சுட்டுப் பலியட்டினார்களே.

கைவிட்டு நாடிக் கருத்தழிந் தச்சற
நெய்யட்டிச் சோறுண்ணும் ஐவரும் போயினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையிட்ட கண்ணாளும் மாடும் இருக்கவே
மெய்விட்டுப் போக விடைகொள்ளுமாறே.

பந்தல் பிரிந்தது பண்டாரங் கட்டற்ற
ஓன்பது வாசலும் ஒக்க அடைந்தன
துன்புற காலந் துரிசுவர மென்மேல்
அன்புடையார்கள் அழுதகன்றார்களே.

நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகை யொன்றேறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்றவாறே.

முப்பதும் முப்பதும் முப்பத் தறுவருஞ்
செப்ப மதிகளுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிகளுடைக் கோயில் சிதைந்த பின்
ஓப்ப அனைவரும் ஒட்டெடுத்தார்களே.

மதுவூர் குழலியும் மாடும் மனையும்
இதுவூர் ஒழிக இதணம தேறிப்
பொதுவூர் புறஞ்சுடு காடது நோக்கி
மதுவூர் வாங்கியே வைத்தகன் றார்களே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைச்சகல் வுற்றது கண்ட மனிதர்கள்
அச்சக லாதென நாடும் அரும்பொருள்
பிச்சது வாய்ப்பின் தொடர்வுறு மற்றவர்
எச்சகலா நின்றிளைக்கின்ற வாறே.

ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்
வேர்த்தலை போக்கி விறகிட்டெரி மூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதியிலோரே.

வளர்த்திடை முற்றத்தோர் மாநிலம் முற்றுங்
குளத்தின் மண்கொண்டு குயவன் வனைந்தான்
குடமுடைந்தால் அவை ஓடென்று வைப்பார்
உடலுடைந்தால் இறைப்போதும் வையாரே.

ஐந்து தலைப்பறியாறு சடையுள
சந்தவை முப்பது சார்வு பதினெட்டுப்
பத்தலும் ஒன்பது பந்தி பதினைந்து
வெந்து கிடந்தது மேலேறி யோமே.

அத்திப் பழமும் அறைக்கீரை நல்வித்துங்
கொத்தி உலைப்பெய்து கூழட்டு வைத்தனர்
அத்திப் பழத்தை அறைக்கீரை வித்துண்ணக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்தி எடுத்தவர் காடு புக்காரே.

மேலும் முகடில்லை கீழும் வடிம்பில்லை
காலும் இரண்டு முகட்டலக் கொன்றுண்டு
ஓலையான் மேய்ந்தவ ரூடு வரியாமை
வேலையான் மேய்ந்ததோர் வெள்ளித் தளிகையே.

கூடங் கிடந்தது கோலங்கள் இங்கில்லை
ஆடும் இலையமும் அற்ற தறுதலும்
பாடுகின்றார் சிலர் பண்ணில் அழுதிட்டுத்
தேடிய தீயினில் தீயவைத் தார்களே.

முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்
இட்டது தானிலை ஏதேனும் ஏழைகாள்
பட்டது பார்மணம் பன்னிரண்டாண்டினிற்
கெட்ட தெழுபதிற் கேடறி யீரே.

இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டான்
முடிஞ்ச தறியார் முழங்குவார் மூடர்
விடிஞ்சிருளாவ தறியா உலகம்
படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே.

மடல்விரி கொன்றையன் மாயன் படைத்த
உடலும் உயிரும் உருவந் தொழாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர்படந்ந் தேழா நரகிற் கிடப்பர்
குடர்பட வெந்தமர் கூப்பிடு மாறே.

குடையுங் குதிரையுங் கொற்றவாளுங் கொண்டு
இடையுமக் காலம் இருந்து நடுவே
புடையு மனிதனார் போகும்அப் போதே
அடையும் இடம் வலம் ஆருயிராமே.

காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பால்துளி பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோற் பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டுப் போன இக்கூட்டையே.

யாக்கை நிலையாமை முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரிய சித்தி மாலை

பந்தம் அகற்றும் அநந்த குணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டிருந்து கரக்குமோ
சந்தமறை ஆகமங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.

உலகிலுள்ள பற்றுக்களையெல்லாம் நீக்கக்கூடிய எண்ணற்ற நற்குண ஆற்றல்கள் எந்தக் கடவுளிடமிருந்து தோன்றுகின்றனவோ. எல்லா உலகங்களும் எந்தக் கடவுளிடம் உறைந்திருந்து மறையுமோ, பல்வேறு இசை வடிவிலான வேதங்கள், ஆகமங்கள், மற்றும் கலைகள் ஆகிய அனைத்தும் எந்தக் கடவுளிடமிருந்து தகுந்த முறையில் உருவாகி வருமோ அத்தகைய தன்மைகளையுடைய தலைவனான ஆனைமுகப் பெருமானை அன்புடன் வணங்குகின்றோம்.

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலக முதலாங் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.

எல்லா உலகங்களிலும் நீங்கமறப் பொருந்தி ஒரே பொருளாக விளங்கி நிற்கும் கடவுள் யாரோ, உலகில் அவ்வப் பொழுது பல்வேறு மாற்றங்கள் தோன்றினாலும், அவற்றினால் பாதிக்கப்படாமல் என்றென்றும் ஒரேநிலையில் ஒப்பற்ற ஒளியைப் பரப்பி நிற்கும் கடவுள் யாரோ, உலகிலுள்ள எண்ணற்ற உயிரினங்களும், புரிகின்ற நன்மை, தீமைகளுக்குரிய பயனை நல்கும் பற்றுக் கோடாய் விளங்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் யாரோ, அந்த உலகின் முழு முதற் பொருளாம் கணபதியை மன மகிழ்ச்சியுடன் சரணடைகின்றோம்.

இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீழும் பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுர்வாழ் பதியும் உறச் செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதி பொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.

எந்தக் கணத்தில் எவ்வித இடர்கள் எதிர்வந்து நேர்ந்தாலும், அவை அத்தனையும் எரியும் நெருப்பில் பஞ்சைப் போல் யாருடைய அருளால் அழிந்தொழியுமோ, உலகில் தொடர்ந்து அடுக்கடுக்காய் பல பிறவிகளை அடையும் உயிர்கள் யாவும், யாருடைய அருளால் வேர்கள் வாழும் தேலோகத்தை அடையுமோ, அந்தத் தேவர்களுக்கும் கூட அவர்கள் தொடங்கும் செயல்கள் ஏதேனும் இடையூறுகள் ஏற்படுமானால் அவற்றை நீக்கி யாருடைய அருளால் அச்செயல்கள் இனிதே நிறைவடையுமோ அத்தகைய தன்மைகள் பொருந்திய பெரிய தந்தங்களைக் கொண்டுள்ள ஆனைமுகன் கடவுளின் எழில் மிக்கத் திருவடிகளைச் சரணம், சரணம் எனக் கூறித் துதிக்கின்றோம்..

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முப்பொருள் சிறப்புக்களிலும் முழு நிறைவு பெற்று விளங்குபவரும், உலக உயிர்களுக்கெல்லாம் நன்மைகளை வழங்கி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்தோறும் அந்த உயிர்க்குலங்களின் அறியாமையை அகற்றி, உண்மைப் பொருளை உணர்த்தும் கடவுளாகிய எல்லையற்ற கருணையை ஆனை முகக்கணபதியின் திருவடிகளைப் புகழ்ந்து போற்றிச் சரணடைகின்றோம்.

செய்யும் வினையின் முதல் யாவன்
செய்யப்படும் அப் பொருள் யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப்பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.

உலகிலுள்ளோர் செய்யும் செயல்களுக்கெல்லாம் மூல முதல்வனாக விளங்குபவரும், அந்தச் செயல்களாகவே இருப்பவரும், ஐயத்திற்குச் சற்றும் இடமின்றி, அச்செயலின் பயனாக விளங்குபவரும், உலகில் தோன்றிய உயிர்களுக்கெல்லாம் நல்வினைப் பயன்களை நடைமுறையில் ஊட்டி விடக்கூடியவருமான பொய்மை சிறிதும் அற்ற இறைவனான ஆனைமுகக் கடவுளின் இனிய அரிய தன்மைகளை உணர்ந்து அவரது திருவருளை விரும்பி அவரிடம் சரணடைகின்றோம்.

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் வீழ்ந்தகைய
வேத முடிவில் நடம் நவிலும்
விமலன் யாவன் விறங்குவர
நாதமுடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன் எண்குணன் எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

வேதங்களாலும் அளவிட்டறிய இயலாத, மேன்மையான தன்மை உடையவரும், மேலும் மேன்மை மிக்க வேதங்களின் முடிவில் எழில் மிகு நடனம் நிகழ்த்திக் காட்டுபவரும், ஓங்கார, நாதமெனும் தத்துவத்தின் எல்லையில் எழுந்தருளியிருப்பவருமான, எண்வகையான சிறந்த குணங்களைக் கொண்ட மெய்யறிவின் தலைவனான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதியின் திருவடிகளை வணங்கிப் போற்றிச் சரணடைகின்றோம்.

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன் நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண் குணமாகி
இணைவான் எவன்வான் இடை ஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்

மண்ணுலகில் ஐந்து குணங்களைக் கொண்டவரும் நீரின் நான்கு குணங்களைக் கொண்டு விளங்குபவரும், நெருப்பின் மூன்று குணங்களெனக் குறிப்பிட்டவரும், காற்றின் இரண்டு குணங்களைக் பெற்றிருப்பவரும் விண்ணுலகின் ஒரே தன்மையாக விளங்கக்கூடியவருமான, பெருமைகளை எல்லாம் பெற்ற கடவுளான கணபதியை அன்புகனிந்த நெஞ்சுடன் வணங்கிச் சரணடைகின்றோம்.

பாச அறிவில் பசு அறிவில்
பற்றற்கரிய பரன் யாவன்
பாச அறிவில் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன் யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
யாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்.

பதி.பசு.பாசம் எனும் தன்மைகளைக் கொண்ட உலகப் பற்றுகளாலும், உயிர்குலங்களின் அறிவினாலும், கண்டுணர்தற்குரிய மேலானவரும், உலகப் பற்றுள்ள அறிவும், உயிர் அறிவும், ஒரு கேப் பொருந்துமாறு செய்பவரும், அந்த இரு வகை அறிவையும், தன்னுடைய திருவருள் தன்மையினால் மாற்றியமைத்து மேலானதொரு மெய்யறிவைத் தரக்கூடிய ஞானச் சுடரொலியைப் பரப்புவருமான கணபதிப் பெருமானின் திருவடிகளைத் தொழுது சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமாட்டில் குத்து விளக்குகள்

அந்தக் குத்துவிளக்குகள் தலைமாட்டில் எரிந்து கொண்டிருக்கின்றன.

அவை, எரிந்தாலென்ன, அணைந்தாலென்ன? அந்த படுக்கையில் கிடக்கும் மனித விளக்கு அணைந்து விட்டது.

அது எரிந்து கொண்டிருந்தவரை குத்து விளக்குகளுக்கு எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தது. ஆனால் அந்த விளக்குகள் ஊற்றும் எண்ணெயை இறைவன் ஊற்றாமல் விட்டுவிட்டான்.

மானுடத்தின் சாகசம் விளக்கைப்போல் எரியாவிட்டால் பத்திரப்படுத்தக்கூடிய நிலையில் அந்த உடம்பு இல்லை. நான்கு நாட்களானால் அது நாறிப்போகும்.

நறுநெய் பூசி வைத்தாலும் அதிலிருந்து பூச்சி, புழுக்கள் உற்பத்தியாவதைத் தடுக்க முடியாது.

அந்த மனிதன் அந்தகாரத்தில் கிடக்கிறான்.

ஆனாலும் அவன் தலைமாட்டில் இரண்டு விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன.

அழுவாரையும், சிரிப்பாரையும் அறிய முடியாத சடலத்திற்கு, அந்த விளக்குகள் எந்த வகையில் உதவப் போகின்றன?

அந்த விளக்கை ஏற்றுவதும் அணைப்பதும் உங்கள் கைகளே! உங்கள் விளக்கை ஏற்றுவதும் அணைப்பதும் எவனுடைய கைகள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெஞ்ஞானிகளும் விஞ்ஞானிகளும் இங்கே தான் யோசிக்கின்றார்கள்.

எல்லோருடைய விளக்குகளும் அணைய வேண்டியதே. அவை எரிந்த காலத்தில் எத்தனை பேருக்கு வழி காட்டின என்பதே முக்கியம்.

சத்தியம் என்ற தாம்பளத்தில் உங்கள் விளக்கை ஏற்றி வையுங்கள்.

குருடர் அல்லாதவர்களுக்கு அவை வழி காட்டிடும்.

ஒரு கோவணத்தை கூட நீங்கள் கொண்டு வந்ததில்லை.

உங்கள் உடம்பில் உள்ள தோல் கூட யாருக்கும் கோவணமாகப் போவதில்லை.

நிலையாமையே நிலையானது என்பதை அவனது மரணப் படுக்கை காட்டுகின்றது.

அந்தச் சடலத்தை நீங்கள் நன்றாகப் பார்த்துக் கொள்ளவே அந்தக் குத்துவிளக்குகள் எரிகின்றன.

மரணத்தில் அடங்கியுள்ள தத்துவத்தை அவை பறைசாற்றுகின்றன.

எதையும் மறுக்கும் நாத்திகனே, மரணத்தையும் மறுத்துப் பாரேன் பார்க்கலாம்.

கவியரசு கண்ணதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்வாக வாழ

பூவின் மணம் போல கட்டையில் தீ போல எள்ளில் எண்ணெய்போல பாலில் வெண்ணெய் போல மனிதனிடம் தெய்வத்தன்மை வெளியே புலப்படாமல் உள்ளே அடங்கியுள்ளது. புற்றுக்குள் வாழும் பாம்புக்கென பால் ஊற்றுகின்றனர். ஆனால் பாம்பைக் கண்டால் அடித்துக் கொல்லுகின்றனர். உழவு மற்றும் விவசாய காரியங்களுக்கு பயன்படுத்தும் காளைகளை கொடுமைப்படுத்தி விட்டு சிவன் வாகனமென நந்தியை கும்பிடுகின்றனர். உயிரோடு இருப்பவைகளுக்கு துன்பம் விளைவித்து குறிப்பாக அநேகம் பேர் தங்கள் பெற்றோர்களின் முதுமைக்காலங்களில் அவர்களைக் கவனிக்காமலும் சரியாக உணவளிக்காமலும் அவர்கள் இறந்த பிறகு மூன்று, எட்டு, முப்பத்தியொன்று வருடாந்திரம் என்றும் சிரார்த்த தினம் என்றும் வருடாந்த திதி என்றும் அறுசுவை உணவுகளை பயபக்தியுடன் படைப்பர் அதுபோல உயிரற்றவைகளுக்கும் வழிபாடு செய்கின்றனர். பசியோடு வாழும் ஒருவனுக்கு ஒரு பிடிசொறு கூட வழங்காதவன் சுவையான பிரசாதங்களை நைவேத்தியமாக தெய்வத்திற்கு படைப்பர். ஆலய உண்டியலில் கட்டுக்கட்டாக காணிக்கை கொட்டுவார்கள் பிச்சைக்காரனுக்கு ஒரு காசு கொடுக்கமாட்டார்கள்.

இவையாவும் நமது மரபு என நினைக்கிறோம் பட்டினியாய் இருக்கும் ஒருவனுக்கு உணவு அளித்தால் அது புனிதமானது உயிரினங்கள் உருவத்தில் இறைவன் இருக்கிறான் என்ற அடிப்படை உண்மையை அறிந்து கொண்டால் உலகில் ஏழைகளும் செல்வந்தர்களும் மகிழ்ச்சியாக இருக்கலாமே.

## சிந்தனைக்கு :

தவறான வழிகளில் சம்பாதித்த பொருட்களைக் காட்டிலும் கௌரவமான ஏழ்மையே சிறந்தது.

தனக்கு வேண்டாததெல்லாம் ஒருவன் வாங்குவானேயானால் தனக்கு வேண்டியதை விற்க வேண்டியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க சில வர்கள்

வாழ்க்கை ஒரு சவால்
அதை சிந்தியுங்கள்
வாழ்க்கை ஒரு பரிசு
அதனை ஏற்றுக்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சாகசப்பயனம்
அதனை மேற்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு துயரம்
அதனை கடந்து பாருங்கள்
வாழ்க்கை ஒரு விளையாட்டு
அதனை விளையாடுங்கள்
வாழ்க்கை ஒரு விேனாதம்
அதனை கண்டறியுங்கள்
வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம்
அதனை பயன்படுத்துங்கள்
வாழ்க்கை ஒரு பயனம்
அதனை தொடருங்கள்
வாழ்க்கை ஒரு காதல்
அதனை அனுபவியுங்கள்
வாழ்க்கை ஒரு அழகு
அதனை ஆராயுங்கள்
வாழ்க்கை ஒரு உணர்வு
அதனை உணர்ந்து கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு போராட்டம்
அதனை எதிர்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு குழப்பம்
அதனை விடைகாணுங்கள்
வாழ்க்கை ஒரு இலக்கு
அதனை எட்டிப்பிடியுங்கள்
வாழ்க்கை ஒரு சோகம்
அதனை கடந்து வாருங்கள்
வாழ்க்கை ஒரு பாடல்
அதனை பாடுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் எழுத்துக்கள்: 247

| | க் | ங் | ச் | ஞ் | ட் | ண் | த் | ந் | ப் | ம் | ய் | ர் | ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | க | ங | ச | ஞ | ட | ண | த | ந | ப | ம | ய | ர | ல | வ | ழ | ள | ற | ன |
| ஆ | கா | ஙா | சா | ஞா | டா | ணா | தா | நா | பா | மா | யா | ரா | லா | வா | ழா | ளா | றா | னா |
| இ | கி | ஙி | சி | ஞி | டி | ணி | தி | நி | பி | மி | யி | ரி | லி | வி | ழி | ளி | றி | னி |
| ஈ | கீ | ஙீ | சீ | ஞீ | டீ | ணீ | தீ | நீ | பீ | மீ | யீ | ரீ | லீ | வீ | ழீ | ளீ | றீ | னீ |
| உ | கு | ஙு | சு | ஞு | டு | ணு | து | நு | பு | மு | யு | ரு | லு | வு | ழு | ளு | று | னு |
| ஊ | கூ | ஙூ | சூ | ஞூ | டூ | ணூ | தூ | நூ | பூ | மூ | யூ | ரூ | லூ | வூ | ழூ | ளூ | றூ | னூ |
| எ | கெ | ஙெ | செ | ஞெ | டெ | ணெ | தெ | நெ | பெ | மெ | யெ | ரெ | லெ | வெ | ழெ | ளெ | றெ | னெ |
| ஏ | கே | ஙே | சே | ஞே | டே | ணே | தே | நே | பே | மே | யே | ரே | லே | வே | ழே | ளே | றே | னே |
| ஐ | கை | ஙை | சை | ஞை | டை | ணை | தை | நை | பை | மை | யை | ரை | லை | வை | ழை | ளை | றை | னை |
| ஒ | கொ | ஙொ | சொ | ஞொ | டொ | ணொ | தொ | நொ | பொ | மொ | யொ | ரொ | லொ | வொ | ழொ | ளொ | றொ | னொ |
| ஓ | கோ | ஙோ | சோ | ஞோ | டோ | ணோ | தோ | நோ | போ | மோ | யோ | ரோ | லோ | வோ | ழோ | ளோ | றோ | னோ |
| ஔ | கௌ | ஙௌ | சௌ | ஞௌ | டௌ | ணௌ | தௌ | நை | பௌ | மௌ | யௌ | ரௌ | லௌ | வௌ | ழௌ | ளௌ | றௌ | னௌ |
| ஃ | | | | | | | | | | | | | | | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் மனிதனாக வாழ 18 வழிகள்

| | | | |
|---|---|---|---|
| 01. | மிகவும் மதிக்கப்படவேண்டியவர்கள் | : | தாய், தந்தை |
| 02. | மிக மிக நல்ல நாள் | : | இன்று |
| 03. | மிகப்பெரிய வெகுமதி | : | மன்னிப்பு |
| 04. | மிவும் வேண்டியது | : | பணிவு |
| 05. | மிகவும் வேண்டாதது | : | வெறுப்பு |
| 06. | மிகப்பெரிய தேவை | : | நம்பிக்கை |
| 07. | மிகக்கொடிய நோய் | : | பேராசை |
| 08. | மிகவும் சுலபமானது | : | குற்றம்காணல் |
| 09. | கீழ்த்தரமான விடயம் | : | பொறாமை |
| 10. | நம்பக்கூடாதது | : | வதந்தி |
| 11. | ஆபத்தை விளைவிப்பது | : | அதிக பேச்சு |
| 12. | செய்யக்கூடாதது | : | நம்பிக்கை துரோகம் |
| 13. | செய்யக்கூடியது | : | உதவி |
| 14. | விலக்கவேண்டியது | : | சோம்போறித்தனம் |
| 15. | உயர்வுக்குவழி | : | உழைப்பு |
| 16. | நழுவ விடக்கூடாதது | : | வாய்ப்பு |
| 17. | பிரிக்கக்கூடாதது | : | நட்பு |
| 18. | மறக்கக்கூடாதது | : | நன்றி |

இவைகளை மனிதனாக பிறந்தவன் பின்பற்றினால் இருப்பதைவிட சிறப்பாக இவ்வுலகில் வாழலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவக் குறிப்புகள்

- மாதுளம் பழச்சாறு, எலுமிச்சாறு கலந்து குடித்து வந்தால் சளித்தொல்லை குணமாகும்.
- ஜாதிக்காய், சந்தனம், மிளகு சேர்த்து அரைத்து தடவிவர பருக்கள் மறையும்.
- குழந்தைகளுக்கு ஏற்படும் தொடர் இருமலுக்கு சிறிது பெருங்காயத்தை வெந்நீரில் கரைத்து தெளிந்த நீரை கொடுத்து வர இருமல் குறையும்.
- தொடர் வயிற்றுக் போக்கு உள்ளவர்கள் பப்பாளிப்பழம் சாப்பிட குணமாகும்.
- மணத்தக்களிக் கீரையை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொண்டால் வாய்ப்புண் வயிற்றுப் புண் குணமாகும்.
- கொத்தமல்லி இலைகளை அரைத்து உருண்டைகளாக்கி சாப்பிட்டு வந்தால் உடற்சூட்டினால் கண் பொங்கி நீர் கோளை தள்ளுவதை கட்டுப்படுத்தலாம்.
- அப்பிள், தேன், ரோஜா இதழ், குங்குமப் பூ, ஏலக்காய், ஆகியவற்றை ஒரு மாதம் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் சுகப்பிரசவம் ஆகும்.
- காய்ந்த நெல்லிக்காயை பவுடராக்கி தேங்காய் எண்ணெய்யுடன் கலந்து கொதிக்கவைத்து வடிகட்டி தேய்த்து வர முடி உதிர்வது நின்று முடி கருமையடையும்.
- வாழைத்தண்டுச்சாறு, பூசணிச்சாறு, அறுகம்புல் சாறு இவைகளில் எதையாவது ஒன்றை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் சதை போடுவதை தடுக்கலாம்.
- வேப்பம் பூவுடன் மிளகு, சீரகம் சேர்த்து உண்டு வர பித்தப்பை நோய் குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முடக்கத்தான் இலைகளை நறுக்கி அரிசி மாவுடன் கலந்து அடை செய்து சாப்பிட வாதம், பிடிப்பு குணமாகும். இரசம், பால் சொதியுடனும் சேர்க்கலாம்.
- மலைவேம்பு இலையை அரைத்து தலையில் பூசி வர பேன் ஒழிந்து போகும்.
- மனநோய் உள்ளவர்களுக்கு தாமரைப்பூவை நீர்விட்டு காய்ச்சி தினசரி 3 வேளை என தொடர்ந்து 41 நாட்கள் குடித்துவர மன அமைதி பெறுவர்.
- மருதாணி இலை அரைத்து கைகளுக்கு இடமுன்னர் கைகளை எலுமிச்சை பழச்சாற்றினால் கழுவிப் பின் உரைவிட்டு போட்டுக்கொண்டால் நன்றாக சிவக்கும்.
- மாதுளம் பழம் அடிக்கடி சாப்பிட்டு வந்தால் ஞாபக சக்தி, எலும்பு உறுதி, பற்கள் உறுதி அடையும்.
- பூண்டு வெங்காயம், இஞ்சி அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் தேவையற்ற கொழுப்புகள் குறையும்.
- பிரண்டையிலைத்துவையில் பசியைத் தூண்டும்.
- தூதுவளையிலைத் துவையல் சளித்தொல்லையை போக்கும்.
- வல்லாரை இலைத் துவையல் ஞாபகசக்தியை தூண்டும்.
- கறிவேப்பிலைத் துவையல் கருகருவென முடிவளரும்.
- தூதுவளை, துளசி, கற்பூரவல்லி, திருநீற்றுப்பச்சிலை, மணத்தக்காளி, ஆடாதோடை, கரிசலாங்கண்ணி, வல்லாரை, கீழாநெல்லி, தராசுக்கொடி என்பவற்றை வீட்டில் வளர்க்க ஆரோக்கியமும் வளரும்.
- சூரிய நமஸ்காரம் முறையான மந்திரங்களுடன் செய்து வந்தால் உடல் குளிர்ச்சி பெற்று மூலம் விடுபடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சுண்டு விரல் நுனியும், பெருவிரல் நுனியும் இணைப்பதால் கிடைக்கும் வருணமுத்திரையால் இரத்தம் சுத்தமாகும். வாயுத்தொல்லை நீங்கும்.

- வெங்காயம், வெள்ளைப்பூண்டுகளை அரிந்தவுடன் பயன்படுத்திட வேண்டும் இல்லை எனின் வியாதிகளை கவர்ந்திழுக்கும் தன்மை வந்துவிடும்.

- அறுகம்புல் 30g அரைத்து பாலில் கலந்து பருகிவர இரத்த மூலம் குணமாகும்.

- வயிற்றுக்கடுப்பு குணமாக காலையில் எழுந்ததும் வெந்தயத்தை வாயில் போட்டு தயிரைக் குடிக்க நீங்கும்.

- குங்குமப் பூவை தினசரி தேன்கலந்து சாப்பிட்டு வந்தால் இரத்தம் சுத்தமாகும்.

- பப்பாளிப்பழம் அடிக்கடி சாப்பிட்டால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

- அன்னாசிப்பழம் அடிக்கடி சாப்பிட்டால் வயிற்றுப் பூச்சிகள் மறையும்

- பனங்கிழங்கு பித்தத்தை நீக்கி உடல் பலத்தை கூட்டும்.

- பீற்றூட் கிழங்கு சமையலில் அடிக்கடி சேர்த்தால் புதிய இரத்தம் உருவாகும்.

- குழந்தை பிறப்பதற்கு முன்னும், பின்னும் பேரீச்சம்பழம் சாப்பிட்டு வந்தால் தாய்ப்பால் அதிகமாக சுரக்கும்.

- தினசரி ஆட்டுப்பால் குடித்து வந்தால் வலிப்பு வருவதை தடுக்கலாம்.

- மூட்டுவாதம் இருப்பவர்க்ள காளானை உணவில் அடிக்கடி சேர்த்து வர பயன் பெறுவர். தேவையற்ற கொழுப்புகளை கரைக்கும் சக்தி இதற்கு உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலரோகம் என்றால் என்ன?

நாம் உட்கொள்ளும் உணவுப்பொருட்களில் மாப்பொருள் சம்பாடு அடைந்து குளுக்கோசாக மாறி இரத்தத்தில் குறிப்பிட்ட மட்டத்தில் பேணப்படுகிறது. இதுவே எங்கள் உடல் இயக்கத்திற்கு சக்தியை வழங்குகிறது. குளுக்கோசை எமது உயிர்க்கலங்கள் பயன்படுத்துவதில் பாதிப்புகள் ஏற்படும் போது குளுக்கோஸ் இரத்தத்தில் சாதாரண அளவைவிட அதிகரிக்கிறது. இந்நிலை சலரோகம் எனப்படுகிறது.

சலரோகத்தை சரியான முறையில் கட்டுப்பாட்டில் வைத்திருக்கா விடில் அல்லது உரிய முறையில் சிகிச்சை பெறாவிடில் கண், சிறுநீரகம், கால், இதயம், இரத்தக் குழாய்கள், மூளை முன்னான் நரம்புகள் என்பன பாதிப்புக்கு உள்ளாகின்றன.

அறிகுறிகள்

- ♠ அதிகளவில் சிறுநீர் கழித்தல்
- ♠ அதிகர்த்த தாகம், பசி
- ♠ திடீரென உடல் மெலிதல் / உடல் நிறை அதிகரித்தல்
- ♠ கண்பார்வை மங்குதல்
- ♠ அவயவங்களில் விறைப்புத்தன்மை ஏற்படுதல்
- ♠ நாட்பட்ட மாறாத புண்கள்
- ♠ பின் கழுத்திலும் உடலின் பின் பகுதியிலும் பருக்கள், கட்டிகள், தோன்றுதல்

கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர

- ⇒ தகுந்த ஒழுங்கான மருத்துவ சிகிச்சை
- ⇒ தகுந்த உணவுப் பழக்கம்
- ⇒ ஒழுங்கான உடற்பயிற்சி
- ⇒ மனவழுத்தத்தை குறைத்தல் / அதற்கான பயிற்சி

உணவில் சேர்க்க வேண்டியவை

- √ சிவப்பரிசி, அரிசிமா, குரக்கன், ஆட்டாமா, சோயாமா,
- √ பயறு, கௌப்பி, உழுந்து, பட்டாணி, கொண்டைக் கடலை, சோயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றை நடுத்தர அளவில் சேர்க்கலாம்.

√ போஞ்சி பயிற்றங்காய், சிறகவரை, புடோல், பாகல், கீரைவரை (குறிஞ்சா) கெக்கரி, வெண்டி, கத்தரி, முள்ளங்கி, நோக்கிள், லீக்ஸ், கத்தரி

√ பழங்களில் பொதுவாக இனிப்பு கூடிய பழங்களை தவிர்ப்பது நன்று சாப்பிட்டபின் இடைநேரங்களில் பழங்களை ஒருதுண்டு என சாப்பிலாம்.

√ மீன்களில் கொழுப்பு குறைவாக இருப்பதால் உண்ணலாம். சிறிய மீன்கள் மிகவும் சிறந்தது.

√ கருவாடு போன்றவற்றில் உப்பு காணப்படுவதால் தவிர்ப்பது நல்லது.

√ கோழி இறைச்சியின் தோலில் கொழுப்பு காணப்படுகிறது தோலை நீக்கிய பின் உணவில் சேர்க்கலாம். முட்டை மஞ்சட்கரு, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, பன்றி, இறால், நண்டு, கணவாய் போன்ற கொழும்பு கூடிய உணவுப் பொருட்களை தவிர்த்தால் இதயநோய் ஏற்படும் வாய்ப்பை சலரோக நோயாளிகள் தவிர்த்துக்கொள்ளலாம்.

* பின்வரும் குறிப்புகளை உங்கள் வாழ்நாளில் கடைபிடித்து நோயற்ற வாழ்வை வாழ இறைவனிடம் பிரார்த்திகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்று
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்தி கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி

முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள்சுமந்து
அந்தி பகலாய்ச் சிவனை ஆதரித்துச் - தொந்தி
சரியாய்ச் சுமந்து பெற்ற தாய் தமக்கே
எரியக் தழல் மூட்டுவேன்

வட்டலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னை காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றி சீராட்டும் தாய்க்கே
விறகிட்டுத் தீ மூட்டுவேன்

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்தி முலை
தந்து வளர்த் தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையில் கொண்டென்னை காப்பாற்றும் தாய்
தனக்கோ மெய்யிலே தீ மூட்டுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசியோ நான் இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருகியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியம்பூ
மானே என அழைத்த வாய்க்கு

அள்ளி இடுவது அரிசியோ தாய் தலைமேல்
கொள்ளி தனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம் வைத்து முத்தாடி என்தன்
மகனே என அழைத்த வாய்க்கு

முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென்னிலங்கையிலே
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க மூள்கவே

வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்பல்
ஆகுமே பாவியேன் ஐயகோ - மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம் கிடந்து என்
தன்னையே ஈந்தெடுத்த தாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீற்றிந்தான் அன்னை வீதிதனில் இருந்தான்
நேற்றிந்தாள் இன்று வெந்து நீறானாள் பால் தெளிக்க
எல்லாரும் வாருங்கள் ஏதென்றிரங்காமல்
எல்லாம் சிவமயமேயாம்

பிறக்கும் போது கொண்டு வந்ததில்லை
பிறந்து மண்மேல் இறக்கும் போது கொண்டு போவதில்லை
இடைநடுவில் குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்ததென்று
-கொடுக்கரிய
திரக்குங் லாமருக்கென் சொல்லுவேன் கச்சியேகம்பனே.

ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற
பேரும் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளும்
சீரும் சதமல்ல செல்வம் சதமல்ல தேசத்திலே
யாரும் சதமல்ல நின்றார் சதம் கச்சி ஏகம்பனே

முடிசார்ந்த மன்னரு முற்றும் உள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதும் கண்டு பின்னும் மிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னினம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே அறிவாரில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் மொழிக்கு ஒரு மொழி

| | | |
|---|---|---|
| 01. அல்லங்காடி | - | மாலையில், இரவில், கூடும் சந்தை |
| 02. ஆதனம் | - | ஒருவரிக்குரிய நிலம் முதலிய சொத்துக்கள் |
| 03. ஏகபோகம் | - | ஒருவர் முழுப் பொருளையும் தாமே தனித்து அனுபவித்தல் |
| 04. கட்டுக்கதை | - | ஆதாரமற்ற செய்திகளை கொண்டு புனையப்பட்ட கற்பனைக்கதை |
| 05. ஒத்திகை | - | கலை நிகழ்ச்சிகளை மேடை ஏற்றுவதற்கு முன் பார்த்து திருத்தம் செய்யும் நிகழ்ச்சி |
| 06. கலைக்களஞ்சியம் | - | அறிவுத்துறைகள் அனைத்தையும் பற்றிய விடயங்களை திரட்டுதல் |
| 07. கால்கோல் விழா | - | யாதாயினும் ஒன்றை தொடங்குவதற்காக எடுக்கப்படும் விழா |
| 08. தசாவதானி | - | ஒரேசமயத்தில் பத்து விடையங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன் |
| 09. தேசபிமானி | - | தான் பிறந்த நாட்டை நேசிப்பவன் |
| 10. நூதனசாலை | - | புராதன பொருட்களை சேகரித்து வைக்கும் இடம் |
| 11. பன்னசாலை | - | முனிவர்கள் வசிப்பதற்கு அலை, கழை கொண்டு மேயப்பட்ட குடிசை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 செல்வங்கள்

01. கலையாத கல்வி
02. கபடமற்ற நட்பு
03. குன்றாத இளமை
04. கலங்காத மனம்
05. பண்கஶ்ரீபான பிள்ளை
06. நேர்மை
07. நல்லாட்சியில் வாழ்வு
08. நட்பு
09. குறையாத வயது
10. அன்பான மனைவி
11. நோயற்ற உடல்
12. புகழ்
13. சிக்கனம்
14. வருமானம்
15. இறையருள்

## உங்களுக்குத் தெரியுமா?

ஊழலற்ற சமூகம் எதுவெனில் தேனீக்கள்தான் உண்மையான சமூகம்.

மிகவும் குறுகிய வரிகளைக்கொண்ட தேசிய கீதம் உள்ள நாடு யப்பான்

உலகில் மிகப்பெரிய கடிகாரம் லண்டனில் உள்ள பிக்பென் கடிகாரம் ஆகும்

வாலில் தனது குட்டிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் பிராணி முள்ளம்பன்றி

அம்பர் எனப்படும் ஆபரணம் தயாரிக்கும் ஒருவகைப்பொருள் மரத்தின் பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத்தில் நிகழும் தவறுகள்

உழைக்காமலே ஈட்டிய செல்வம்
மனச்சாட்சி இல்லாத இன்பம்
பண்பு இல்லாத அறிவு
நல்லொழுக்கம் இல்லாத விஞ்ஞானம்
தியாகம் இல்லாத வணக்கம்.

## அஜீரணத்திற்குரிய முக்கிய காரணம்

அதிக காரம்
அதிக உப்பு
அதிக எண்ணெய்
பொரித்த உணவு
வேகாத உணவு
அதிக தேநீர், கோப்பி
புகை பிடித்தல்
மது பழக்கம்

## மனிதன் மனிதனாக வாழ நினைவில் வைத்திருக்க வேண்டியவை?

| | | |
|---|---|---|
| மிகமிக நல்ல நாள் | - | இன்று |
| மிகப் பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| மிகவும் வேண்டியது | - | பணிவு |
| மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | - | சமயோஜிதப்புத்தி |
| மிகக்கொடிய நோய் | - | பேராசை |
| மிகவும் சுலபமானது | - | குற்றம் காணல் |
| நம்பக் கூடாதது | - | வதந்தி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கப் பிரதட்சணை

அங்கப் பிரதட்சணை என்பது ஆண்களுக்கான ஓர் நமஸ்கார முறையாகும். இதனைப் பெண்கள் செய்வது கூடாது. உடலிலுள்ள அங்கங்கள் யாவும் நிலத்தில் படும்படி செய்யப்படும் ஓர் நமஸ்காரமாகும்.

இது விரதம் இருந்த பின் செய்யும் ஓர் செயற்பாடாகும். இதன் மூலம் எமது உடலினுள் இருக்கும் உணவுக்கால்வாய்த் தொகுதி ஒழுங்கான நிலையில் ஒழுங்குபடுத்தப்படுகிறது. அதுமட்டும் இன்றி மலச்சிக்கல், மூலம் போன்ற நோய்கள் தவிர்க்கப்படும்.

பெண்களின் மார்புப்பகுதி லக்ஷ்மி வாசம் செய்யும் இடம் என்பதால் பெண்கள் அங்கபிரதட்சணை செய்யக்கூடாது என சொல்லப்படுகிறது. அதிலும் ஒரு விஞ்ஞான உண்மை பொதிந்துள்ளது. நிலத்திலிருந்து வெளியாகும் மின்காந்த அலைகள் பெண்களின் மார்பு, வயிற்றுப்பகுதியைத் தாக்கி பல்வேறான பின்விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

*. பிறர் செய்வதில் எது உனக்கு பிடிக்கவில்லையோ அதை நீ மற்றவர்களுக்கு செய்யாதே.

*. நல்லதையோ தீயதையோ எதையொருவன் செய்தாலும் அதன் விளைவுகள் அவனைத் தொடர்ந்து கொண்டே இருக்கும்

*.பணம் இல்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது பணம் இருந்தால் உன்னையே உனக்குத் தெரியாது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்து கொள்வோம்....

| | | |
|---|---|---|
| ஆபத்தை விளைவிப்பது | - | அதிகப்பேச்சு |
| செய்யக்கூடாதது | - | நம்பிக்கைத்துரோகம் |
| செய்யவேண்டியது | - | உதவி |
| விலக்க வேண்டியது | - | சோம்பேறித்தனம் |
| மறக்கக்கூடாதது | - | நன்றி |
| கீழ்த்தரமான விடயம் | - | பொறாமை |
| மிகக் கொடியது | - | நோய் |
| உயர்வுக்கு வழி | - | உழைப்பு |

## மகிழ்ச்சியான மண வாழ்க்கைக்கு எட்டு விதிகள்

1. ஒரே சந்தர்ப்பத்தில் இருவரும் கோபமடையாதீர்கள்.
2. உங்கள் வீடு தீப்பற்றி எரிந்தாலன்றி ஒருவரோடு ஒருவர் பெரும் சத்தம் போடாதீர்கள்.
3. தர்க்கத்தினால் வெற்றி அடைபவர் எப்போதும், உங்கள் வாழ்க்கைத் துணைவராக இருக்கட்டும்
4. கண்டிக்கும் போதும், குறைகளை கூறும் போதும், அதை அன்புடன் மனம் புண்படாமல் எடுத்துச் சொல்லுங்கள்.
5. ஒரு தர்க்கத்தில் ஈடுபட்டு அத்தர்க்கத்தில் உடன்படிக்கை ஏற்படாமல் நித்திரைக்கு செல்லாதீர்கள்.
6. ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது உங்கள் கணவரை புகழ்ந்து ஒரு வார்த்தையாவது கூறுங்கள்.
7. நீங்கள் ஏதாவது தவறுகள், பிழைகள், செய்திருந்தால், அவற்றை ஏற்றுக் கொண்டு மன்னிப்பு கோருங்கள்
8. கடந்த கால விடயங்களை சம்பவங்களை, மறந்து விடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்வுக்கு சில வழிகள்

1. அன்னையிடம் அன்பை கற்க வேண்டும்.
2. தந்தையிடம் ஒழுக்கத்தை கற்க வேண்டும்
3. ஆசிரியரிடம் நல்ல கல்வியை கற்க வேண்டும்
4. மத குருவிடம் தெய்வ பக்தியை கற்க வேண்டும்
5. மனைவியிடம் வாழ்க்கையைக் கற்க வேண்டும்
6. நண்பனிடம் நட்பைக் கற்க வேண்டும்
7. அன்னையிடம் அறிவைக் கற்க வேண்டும்
8. குழந்தையிடம் பாசத்தைக் கற்க வேண்டும்
9. பெண்ணிடம் பொறுமையைக் கற்க வேண்டும்
10. நாயிடம் நன்றியைக் கற்க வேண்டும்.

## வீட்டின் நீள அகல பலன்கள்

1. 06 அடி நன்மை
2. 07 அடி மத்திமம்
3. 08 அடி இராட்சியம்
4. 09 அடி கேடு
5. 10 அடி பாக்கியம்
6. 11 அடி புத்திரலாபம்
7. 12 அடி பிள்ளை இன்மை
8. 13 அடி மரணம்
9. 14 அடி பகை
10. 15 அடி துன்பம்
11. 16 அடி செல்வம்
12. 17 அடி நாளுக்கு நாள் ஏக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி என்ற வரிசையில்

01.09.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமான எமது குடும்பத் தலைவி அமரர். சுப்பிரமணியம் தங்கம்மா அவர்களின் இறப்பினை அறிந்து ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்தோருக்கும் ஆறுதல் கூறியோருக்கும் அன்னாரின் இறுதிச்சடங்கு நிகழ்விலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டோருக்கும் மற்றையோருக்கும், நாம் ஆழ்ந்த துயரத்தில் இருந்த நாளில் உணவு வழங்கி ஆறுதல் வார்த்தைகள் கூறிய உள்ளங்களுக்கும், கண்ணீர் அஞ்சலி, மலர்வளையம், பதாகை அமைத்து வெளியிட்ட உற்றார், உறவினர், நண்பர்கள், மற்றும் தொலைபேசியிலும் முகநூல் மூலம் அனுதாபத்தைத் தெரிவித்த புலம்பெயர்ந்த உறவுகளுக்கும் இம்மலரை சிறப்புற அமைத்துத்தந்த சுபாஸ் அச்சகத்தினருக்கும், எமது குடும்பத்தின் சார்பாக மனமுவந்த நன்றியைக் கூறிக் கொள்கிறோம்.

- நன்றி -

**இங்ஙனம்**
**-குடும்பத்தினர்-**
**01.10.2013**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையின் நியதி

"பிறப்பு என்பதும் இறப்பு என்பதும் பழமையான உலக நியதி"

"இரவு என்பது ஓய்விற்காக ஒதுக்கப்படும் நேரமல்ல அது மரணத்தின் ஒத்திகை"

"நாம் எதையும் கொண்டு வந்ததுமில்லை பிறந்து மண்மேல் இறக்கும்போது எதையும் கொண்டு போவதுமில்லை"

"இரவில் தோன்றும் சந்திரனும் அல்ல. பகலில் தோன்றும் சூரியனும் அல்ல" ஏளனம் செய்யும் உலகில் பகவான் கூறியது போல எது நன்றாக நடக்குமோ? அதுதான் நடக்கும், எது நடக்க இருக்குமோ அதுதான் நடக்கும். எதை இழந்து, எதற்காக அழுகிறாய் எதை நீ எடுத்துக் கொண்டாயோ? எதைக் கொடுத்தாயோ! எது இன்று உன்னுடையதோ அது நாளை மற்றொருவருடையது ஆகிறது. மறு நாள்வேறொருவருடையதாகிறது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

விஸ்வலிங்கம் + தெய்வானை

- பொன்னம்மா (அமரர்)
- சுப்பிரமணியம்
- பொன்னம்பலம் (அமரர்)
- இரத்தினசிங்கம்
- வள்ளிநாயகி (அமரர்)
- செந்தில்வேல் (அமரர்)

சுப்பிரமணியம் + தங்கம்மா

- சிவராசா + செல்வராணி
  - நவகீதன்
    - சுலக்சனா
    - விதுஜா
    - கனிசன்
  - நவறூபன்
    - கீர்த்தனா
    - பிரணவி
    - விதுசன்
  - நவஜித்தா
    - றூபன்
    - அட்சயா
  - தேனுசன்
- சிவராணி + செல்வவிநாயகம்
  - கவிதன்
    - விஜயதாரணி
    - கவிஜா
  - வனஜா
    - தயாளன்
    - தரனிகன்
    - தக்ஷிகன்
- சிவயோகேஸ்வரி + கேசவநாதன்
  - கிருபாலினி
    - சுரேஷ்காந்
    - விசானி
  - கோகிலினி
- சிவபாலன் + புஸ்பமலர்
  - பிரதீஷ்
    - விசிதா
    - அஜய்
    - அஞ்சலி
  - பிரசாந்
  - பிரவினா
- தில்லைநாதன்+ தேவசேனாம்பிகை
  - கஜேந்திரன்
    - ரூபதாரணி
    - யுகித்
  - கார்த்திகா
    - பாலமுருகன்
    - அஸ்வன்
  - கயூரன்
    - ரூபினி
- பத்தமநாதன் சுதாமதி
  - கிரிஷாந்
  - மீனுகா
  - சாளினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

நாகமுத்து + கற்பகம்

சிவக்கொழுந்து (அமரர்)
இரத்தினம் (அமரர்)
சண்முகம் (அமரர்)
தங்கம்மா

+ தங்கம்மா

தில்லைநாதன்+
தேவசேனாம்பிகை

கஜேந்திரன்
கார்த்திகா
கயூரன்

ரூபதாரணி

ரூபினி

யுகித்
அபர்ஸ்கா
கவிமிதா

பாலமுருகன்

அஸ்வன்

பத்தமநாதன் +
சுதாமதி

கிரிஷாந்
மீனுகா
சாளினி

பாஸ்கரன் +
நாகராணி

அனுசன்
அனோஜன்

பிரபாகரன் +
கலைச்செல்வி

சாருஜா
கிருசிகன்
ஜானுஜா

ஈஸ்வரன்
+
மதிவதனி

யாழினி
ராஜ்குலன்
றஜீவன்
தனுசன்

கிருபாகரன்

கிருஜா

தவனேஸ்வரி
+
தர்மராசா

தகீஸ்
தாரகன்

கிருஸ்ணகுமார்
+
பிரபானந்தி

அபினன்
அபிஷா
அபிஷான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தின் உள்ளிருந்து



எங்கள் இதயத்தில் இடம் பிடித்த
எங்கள் தங்க அம்மா
எங்களை விட்டு எங்கு சென்றீர்கள் ?

எங்களுக்கு நல்ல அன்புத்தாயாக
ஆறுதல் தரும் அருமை மாமியாக
ஆசையும் அன்பும் அறிவும் ஊட்டிய
அம்மம்மாவாக, அப்பம்மாவாக
உலக வலம் வந்தீர்கள்.
உங்கள் வாழ்க்கைப் பயணிப்பு
எங்கள் வாழ்வுக்கு அடித்தளம்
உங்கள் அன்பு அரவணைப்பு
எங்கள் பண்புக்கு அத்திவாரம்.

எங்கள் வாழ்வு இருக்கும் வரையில்
உங்கள் நினைவுகள் எங்களோடு தான்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org